அடுத்து என்னுடைய தொகுதியின் பிரச்சினை, நீண்ட நாள் பிரச்சினை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான்கைந்து முறை கொண்டு வந்து மனு செய்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களிடமும் கொடுத்திருக்கிறேன். உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் என்பது 15,000 ஏக்கருக்கு நீர்ப்பாசனத் திட்டம் கொண்டது. இதை வருகிற நிதி ஆண்டிலாவது பட்ஜெட்டில் எடுத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வருகிற மாதிரி தெரியவில்லை. அதே மாதிரி, செண்பகாதேவி அணைக்கட்டுத் திட்டம், கேரளா பார்டரில் உடைப்பு ஏற்பட்டு, தமிழ்நாடு அரசு அதற்காக 5 லட்சம் ரூபாய் முன்பணம் கொடுத்திருக்கிறார்கள், அந்த உடைப்பை அடைப்பதற்காக. ஆனால் பல ஆண்டுகள் முன்புஇந்தப் பணத்தைக் கொடுத்தும் கூட, இதுவரைக்கும் அந்த உடைப்பை அடைக்கவில்லை. என்ன காரணம்? அது நீடித்துக் கொண்டே போகிறது. நமக்கு வரக்கூடிய தண்ணீர் கேரளாவுக்குப் போவதால், எங்களுக்கு விவசாயம் கடுமையாகப் பாதிக்கிறது. அதை உடனடியாக அடைத்துக் கொடுக்க வேண்டும். அதே மாதிரி உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து இந்த பட்ஜெட்டில் சேர்த்து முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. ஆ. சுப்புரத்தினம் இப்போது மணி 2.28. (குறுக்கீடு). திரு. ஆர் சுப்புரத்தினம் நாளை பேசலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (19—3—1994) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

27. 1—4—1981 முதல் 31—12—1982 வரையிலான காலத்திற்கு அரவைக் கருவிகள் விற்பனைக்காக செலுத்த வேண்டிய விற்பனை வரி, அபராதம் மேல் வரி மற்றும் கூடுதல் வரி ஆகியவற்றை கைவிடுதல் குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7—9—1993-ஆம் நாளிட்ட 314 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [(1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

1994 மார்ச் 14

28. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு—1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 20—7—1993-ஆம் நாளிட்ட 827-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ.6) துறையின் 7—9—1993ஆம் நாளிட்ட 1349ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் 1992–93-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)].

31. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1992–93 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

4. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1991–92 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

5. தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் 1990–91 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை. (தமிழ்).

*6. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

*7. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

*8. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (மூன்றாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

*9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

---

* 17—3—1994 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.